


டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டு,

ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஓ.எஸ். நம்பர். 70/99.

---

1. டி.ஏ. சங்கர் ராஜா, 2. டி.எஸ். நவமோகன் ராஜா,
3. டி.எஸ். மகேந்திர ராஜா, 4. டி.எஸ். நந்தகுமார் ராஜா.

.. வாதிகள்.

-/ எதிர் /-

1. டி.ஏ. தர்மராஜா, 2. டி.டீ. பாலசுப்பிரமணியராஜா.

.. பிரதிவாதிகள்.

உபயவாதிகள் பக்கம் மெமோ

உபயவாதிகள் கட்சி எப்படி இருப்பினும் அவர்கள் தங்களுக்குள் சமாதானம் செய்து கொண்ட விவரம் வருமாறு:-

1) இத்துடன் உபயவாதிகள் வரைபடம் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த வரைபடத்தில் இந்த சமரச ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டியது. வரைபடத்தில் இராஜபாளையம் டவுன், பெரியமந்தை தெரு கதவு எண்.5ல் உள்ள பழைய மற்றும் புதிய காரை வீடுகள் வாதிகளுக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும். வாதிகளின் வீட்டை ஒட்டி கீழ்புறம் உள்ள காலிமனை பூராவும் கிணற்றுக்கு செல்கின்ற தென்வடல் நடைபாதையும் சேர்த்து வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதாகும். அதில் பிரதிவாதிகளுக்கு எந்த விதமான பாத்தியதையும், உரிமையும் கிடையாது.

2) அதே போல வரைபடத்தில் இராஜபாளையம் டவுன், பெரியமந்தை தெரு கதவு எண்.6 உள்ள காரை வீடு பிரதிவாதிகளுக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும். அந்த வீட்டிற்கு மேற்கே உள்ள மாட்டுத் தொழுவமும், ஏனிப்படியும் அதைச் சேர்ந்த காலியிடம் பூராவும் பிரதிவாதிகளுக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும். அதில் வாதிகளுக்கு எந்த விதமான உரிமையும் பாத்தியதையும் கிடையாது. ..

திருத்தம் சேர்த்தல்

1/175


ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய்
१रुपया
1 Re.
ایک روپیہ
COPY STAMP

3) இராஜபாளையம் டவுன், பெரியமந்தை தெரு, வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட முறையே கதவு எண்கள் 5 மற்றும் 6 உள்ள வீடுகளுக்கும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மாட்டுத் தொழுவத்திற்கும் வாதிகளின் வீட்டிற்கு கிழக்கே உள்ள காலியிடத்திற்கும் வடக்கே இருக்கின்ற தென்வடல் 4 அடி அகலமும் கிழமேல் 69 அடி நீளம் உள்ளது பொதுநடைபாதை வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுநடைபாதையாகும். அந்தப் பொதுநடைபாதையில் வாதிகளும், பிரதிவாதிகளும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யாமல் பொதுநடைபாதையாகவே அனுபவித்துக் கொள்ள வேண்டும். அந்த பொதுநடைபாதையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் வீட்டு கழிவு தண்ணீர் குழாய் மற்றும் குடிநீர் குழாயும் தற்பொழுது சென்று கொண்டிருக்கிறது. அந்தக் கழிவு நீர் மற்றும் குழாய் பொதுநடை-பாதையில் எப்பொழுதும் போல குழாய் பதித்துக் கொண்டு செல்ல இருபார்ட்டியாருக்கும் உரிமை உண்டு.

4) மேலே கர்ட்டி உள்ளகிழமேல் பொதுநடைபாதையின் தொட்ர்ச்சியாக கீழக்காசியில் இருந்து தென்வடலாக உள்ள பொதுநடைபாதை கிழமேல் 6 அடி தென்வடல் நீளம் சுமார் 75 அடி உள்ள கிழமேல் பெரிய மந்தை தெருவுக்கு செல்லும் பொதுநடைபாதை வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது நடைபாதையாகும். அந்தப் பொதுநடைபாதையை இரு பார்ட்டியாரும் அனுபவித்துக் கொள்ள வேண்டியது. அதில் இரு பார்ட்டியாரும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. இந்த தென்வடல் பொதுநடைபாதையில் கழிவு தண்ணீர் குழாயும், முனிசிபல் குடிதண்ணீர் குழாயும் இப்பொழுது.....

2/175

திருத்தம்/
சேர்த்தல்/



கொண்டு செல்வது போல் எப்பொழுதும் கொண்டு செல்ல உரிமை உண்டு.

5) மேலே கண்ட கதவு எண்.5 மற்றும் 6 வீடுகளின் மாடியில் இரண்டு வீடுகளையும் பிரித்துக் காட்ட ஜாடு சுவர் இல்லாமல் இருந்து வருகிறது. எனவே அந்த இரண்டு வீடுகளுக்கும் இடையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பொதுச் செலவில் 6 அடி உயரத்தில் 3/4 அடி கனத்தில் தென்வடலாக இ, எப், லைனில் செங்கல் மற்றும் சிமிண்டு வைத்து கட்டி இருபுறமும் சிமிண்டு பூசிக் கொள்ள வேண்டியது. பொதுச் சுவரில் தோண்டி மாடாக்குழியோ, அலமாரியோ வைக்கக்கூடாது.

6) மேலே கண்ட சரத்துகளுக்கு இருபார்ட்டியாரும் சம்மதித்து இதில் கையெழுத்து செய்திருக்கிறோம். இந்த ஒப்பந்தம் உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த மெமோவையும் வரைபடத்தையும் டிக்ரியுடன் இணைக்க வேண்டும். இந்த மெமோவை ரிக்கார்டு செய்து கொண்டு வாதிகளின் வழக்கை செலவுத் தொகையின்றி நிச்சய செய்ய வணக்கமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

ஒப்பம்.த.அ. சங்கார்ராஜா,

ஒப்பம்.டி.எஸ். நவமோகன் ராஜா,

ஒப்பம்.டி.எஸ். நந்தகுமார் ராஜா. .. வாதிகள்.

~~தர்மராஜா~~/கீரல். தர்மராஜா.டி.ஏ.,

ஒப்பம்.டி.டீ. பாலசுப்பிரமணிய ராஜா. .. பிரதிவாதிகள்.

ஒப்பம்.எஸ். அனந்தப்பன், 21.7.99 - வாதிகளின் வழக்கறிஞர்.

ஒப்பம்.××××பிரதிவாதிகளின்வழக்கறிஞர்; 21.7.99.

முத்திரை:- மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர். வரவு:-21.7.99.

Order : Parties are present. Check and call on 26.11.99.


Id/- D.A., Prl. District Munsif, 21.07.99.

26.11.99: Call on 30.11.99. Id/- D.A., Prl. District Munsif, 26.11.99.

3/175

Cor. TWO

Int. NIL



30.11.99 : The terms of compromise read over to the parties and admitted to be correct.

Id/- D.A., Prl. District Munsif, 30.11.99.

4/30

-/ True copy /-


Cor.

Int.

Copied by
18.1.2000

Examiner
19.1.2000.

19.1.2000
Superintendent.



முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

முன்னிலை:- திரு.டி. அருள்ராஜ், பி.எஸ்சி., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

1999ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.70/99.

---

1. டி.ஏ. சங்கார் ராஜா, த/பெ. அன்னமராஜா, பெரிய மந்தை தெரு, பழையபாளையம், இராஜபாளையம் டவுன்.
2. டி.எஸ். நவமோகன், த/பெ. சங்கார் ராஜா, -கை- விலாசம்.
3. டி.எஸ். மகேந்திர ராஜா, த/பெ. டி.ஏ. சங்கார் ராஜா, -கை- விலாசம்.
4. டி.எஸ். நந்தகுமார்ராஜா, த/பெ. டி.ஏ. சங்கார் ராஜா, -கை- விலாசம். ... வாதிகள்.

-/ எதிர் /-


1. டி.ஏ. தர்மராஜா, த/பெ. அன்னமராஜா, பெரிய மந்தை தெரு, பழைய பாளையம், இராஜபாளையம்.
2. டி.டீ. பாலசுப்பிரமணிய ராஜா, த/பெ. டி.டீ. தர்மராஜா, -கை-விலாசம். .. பிரதிவாதிகள்.

பிராது 2வது தபசில் சொத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட பொதுநடைபாதையும், பொது தெருவிளிப்படியும் என்று விளம்புகை செய்தும், அதனைத் தொடர்ந்து வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர ஊத்தரக் கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் மதிப்பு ரூ.4000/-. அதில் பாதி ரூ.2000/-க்கு த.நா.நீ.க.ச. பிரிவு 25(பி)ன் படி ரூ.150.50 நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

திருத்தம் சேர்த்தல்

1/175



வழக்கு மூலம் - 8.5.67, 1970, 1980, 1983, 1992, 1998 மற்றும் 1.3.99 தேதிகளில் இராஜபாளையம் டவுண், பழையபாளையம், பெரிய மந்தை தெருவில் வைத்து உற்பத்தி.

வழக்கு தாக்கல் - 12.3.99.

இந்த வழக்கு இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் திரு.எஸ். அனந்தப்பன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் திரு.பி. பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், உபயவாதிகள் தரப்பில் ஜாயிண்ட் மெமோ தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிலையில் ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்த நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்


தீர்ப்பாணை

1. பிராது தபசில் சொத்துக்களில் அமைந்துள்ள வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட முறையே கதவு எண்.5 மற்றும் 6 உள்ள வீடுகளுக்கும், பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட மாட்டுத் தொழுவத்திற்கும் வாதிகளின் வீட்டிற்கு கிழக்கே உள்ள காலியிடத்திற்கும் வடக்கே இருக்கின்ற தென்வடல் 4 அடி அகலமும் கிழமேல் 69 அடி நீளமும் உள்ள பொதுநடைபாதையும் மேற்படி கிழமேல் பொதுநடைபாதையின் தொடர்ச்சியாக கிழக்கடாசியில் இருந்து தென்வடலாக உள்ள பொதுநடைபாதை கிழமேல் 6 அடி தென்வடல் நீளம் சுமார் 75 அடி உள்ள கிழமேல் பெரிய மந்தை தெருவுக்குச் செல்லும் பொதுபடைபாதையும் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது நடைபாதைஎன்றும் விளம்புகை செய்யப்படுகிறது.

2. ஜாயிண்ட் மெமோ மற்றும் வரைபடம் தீர்ப்பாணையின் ஒரு பாகமாக கருதப்படும். ....

2/175

திருத்தம் / One
சேர்த்தல் / Nil



3. செலவுத்தொகை இல்லை. (வாதிகளின் செலவுத் தொகை ரூ.700.75. பிரதிவாதிகளின் செலவுத் தொகை ரூ-(-) (பிரதிவாதிகள் தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை).

செலவுத் தொகை பட்டியல்

(வாதிகள் பக்கம்)

1. நீதிமன்றக்கட்டணம்	...	ரூ.150.50
2. வக்காலத்து	...	ரூ. 1.50
3. வழக்குரைஞர் கட்டணம்	...	ரூ.500.00
4. கட்டளைகளை சேர்க்க	...	ரூ. 29.75
5. இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு		ரூ. 4.00
6. பிளீடிங் சார்ஜ்	...	ரூ. 15.00
மொத்தம்	...	ரூ.700.75

சொத்து விவரம்

1வது தபசில்: -

விருதுநகர் டிஸ்டி, இராஜபாளையம் சப்டி, இராஜபாளையம் டவுன் பழையபாளையம், பெரிய ~~சாவடி~~ மூங்கில் தெருவில் உள்ள கதவு எண்.5 மற்றும் 6 உள்ள வீடுகளுக்கும் அதைச் சேர்ந்த இடங்களுக்கும் மால் :-

கிழமேல் பொது நடைபாதைக்கும் - தெற்கு; தென்வடல் பொது நடைபாதைக்கும் - மேற்கு; சீனிவாச அய்யங்கார் வகையறா காவிமனைக்கும், கிணற்றுக்கும் - வடக்கு; சுந்தரராஜ நாயுடு வகையறா மனைக்கும் - கிழக்கு.


இதற்குள்பட்ட வீடுகளும் மனைகளும் கிழமேல் அடி 86.3/4 தென்வடலடி 49ம் தபசில் சரி.

2வது தபசில்:-

விருதுநகர் டிஸ்டி, இராசபாளையம் சப்டி, இராசபாளையம் டவுன் ....

3/175

திருத்தம்
சேர்த்தல்



பழையபாளையம், பெரியமந்தை தெருவில் உள்ள கதவு எண். 6 எண்ணுள்ள வீட்டிற்கு மேற்கே உள்ள பொதுநடைபாதைக்கும், பொது எனிப்படிக்கும் மால்:- கதவு எண். 6 உள்ள வீட்டுக்கும் - மேற்கு ; கிழமேல் பொதுநடைபாதைக்கும் - தெற்கு; பிரதிவாதிகளின் மாட்டுத் தொழுவுக்கும் - கிழக்கு; பிரதிவாதிகளின் சமையலறைக்கும் - வடக்கு, இதற்குள் கிழமேல் அடி 3, தென்வடல் அடி 30 உள்ள நடைபாதையும் அந்த நடைபாதையிலிருந்து பிரதிவாதிகளின் சமையலறையை ஒட்டி மெத்துக்கு செல்கின்ற பொது ஏனிப்படியும் தபசில் சரி. வரைபடத்தில் எக்ஸ் 2, எம்.வி.என்.டி.ஓ.ஆர். எஸ்.டி. எக்ஸ் 3 என குறியிடப்பட்டுள்ளது.

1999ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்றமுத்திரையும் போடப்பட்டது.

ஒப்பம்.டி.. அருள்ராஜ், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

4/100 -/ உண்மை நகல்/-,

திருத்தம்
சேர்த்தல்

நகல் எழுத்தர்
18.1.2000

பரிசோதகர்
19.1.2000.

கணக்காளிப்பாளர்.
19.1.2000

DISTRICT AND SESSIONS COURT
KAMARAJAR DT. AT SRIVILLIPUTTUR

Application made on 3.12.99 199

Stamps Called for on 11.1.2000 199

Stamps deposited on 12.1.2000 199

Copy made ready on 19.1.2000 199

Copy delivered on 21.1.2000 199

Superintendent

4 - 555 + plan

4 - 625

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

ஸ்ரீவில்லிபுத்தூர்.


- தீர்ப்பாணை -

(மெமோ மற்றும் வரைபடம் இணைக்கப் பட்டுள்ளது).

30.11.99.

4419

திரு. எஸ். அனந்தப்பன், அட்வகேட்.



முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

முன்னிலை:- திரு.டி.அருள்ராஜ், பி.எஸ்சி., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

1999ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.70/1999.

---

1. டி.ஏ. சங்கர் ராஜா, 2. டி.எஸ். நவமோகன் ராஜா,

3. டி.எஸ்.மகேந்திரராஜா, 4. டி.எஸ். நந்தகுமார் ராஜா. .. வாதிகள்.

-/ எதிர் /-

1. டி.ஏ. தர்மராஜா, 2. டி.டீ. பாலசுப்பிரமணிய ராஜா ..பிரதிவாதிகள்.

இந்த வழக்கு இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் திரு.எஸ். அனந்தப்பன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் திரு.பி. பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், உபயவாதிகள் தரப்பில் ஜாயிண்ட்மெமோ தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிலையில் ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்த நீதிமன்றம் அய்ந்து வழங்கும்

தீர்ப்புரை


பிராது 2வது தபசில் சொத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட பொது நடைபாதையும், பொது ஏணிப்படியும் என்று விளம்புகை செய்தும், அதனைத் தொடர்ந்து வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைபரிகாரம் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கு இன்று என் முன்பாகவிசாரணைக்கு வந்தபோது உபயவாதிகள் தரப்பில் ஜாயிண்ட் மெமோ தாக்கல் செய்யப்பட்டு ....

1/175

திருத்தம்

சேர்த்தல்



பதிவு செய்யப்பட்டது. எனவே, சமாதானக் குறிப்பாணையில் கண்ட விவரப்படிக்கு, வழக்கின் சுருக்கதிகளைப் பொறுத்தளவில் மட்டும் தீர்ப்பானை பிறப்பிக்கப்படுகிறது. பிராது வரைபடம் தீர்ப்பானையுடன் இணைக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

1999ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் அவையறிய பகரப்பட்டது. ஒப்பம்.டி. அருள்ராஜ், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, மீ.வில்லிபுத்தூர்.

2/40

-/ உண்மை நகல் /-

திருத்தம்

சேர்த்தல்

நகல் எழுத்தர்
18.1.2000

பரிசோதகர்
19.1.2000.

19-1-2000
கண்காணிப்பாளர்.

DISTRICT AND SESSIONS COURT
KAMARAJAR DT. AT SRIVILLIPUTTUR

Application made on 3.12.99

Stamps Called for on 11.1.2000

Stamps deposited on 12.1.2000

Copy made ready on 19.1.2000

Copy delivered on

Superintendent

2 - 215

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

ஸ்ரீவில்லிபுத்தூர்.

அ.வ.எண். 70/1999.

- தீர்ப்புரை -

30.11.99.

4419

திரு. எஸ். அனந்தப்பன், அட்வகேட்.

O.S. No. 70/99.

T.A. சுப்பிரமணிய வாத்தியார் — வாதி(கள்)


T.A. தங்கராஜா வாத்தியார் — பிரதிவாதி(கள்).

Rough plan.

கிராமநத்தம் மேல்புறம் பகுதியிலுள்ள.



பெரிய மந்தைத் தெரு ரோடு


M
N
L
K
H
J
A
F
B
D
E
C
தெருவிலிருந்து
வீடுகளுக்கு செல்லும் பாதை
தெருவிலிருந்து
வீடுகளுக்கு செல்லும்